114. 1990 ஆம் ஆண்டு தமிழ் நாடுநாட்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 12—06—1990 ஆம் நாளிட்ட 587- ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

115. 1988-89 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72-(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (ஆங்கிலம்.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

107. கோரிக்கை எண். 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிருவாகம் (தமிழ். ஆங்கிலம்).

108. கோரிக்கை எண். 10—பால் பண்ணை வளர்ச்சித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1991—92 (தமிழ், ஆங்கிலம்).

109. கோரிக்கை எண். 22—கால்நடை பராமரிப்புத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1991—92 (தமிழ், ஆங்கிலம்).

110. கால்நடைப் பராமரிப்புத் துறை குறித்த செயல் முறைத் திட்டம், 1991—92 (தமிழ், ஆங்கிலம்).

111. கோரிக்கை எண். 45—காட்டு வளத்துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92(தமிழ், ஆங்கிலம்)

112. காட்டு வளத்துறை குறித்த செயல் முறைத் திட்டம், 1991--92 (ஆங்கிலம்).

113. கோரிக்கை எண். 21—மீன்வளத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு, 1991—92 (தமிழ், ஆங்கிலம்.

114. மீன்வளத்துறை குறித்த செயல் முறைத் திட்டம், 1991–92 (ஆங்கிலம்).

TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 25]

115. பொது நிறுவனங்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை, 1991-92.

116. பொது நிறுவனங்கள் குழுவின் பனிரெண்டாவது அறிக்கை, 1991-92.

117. பொது நிறுவனங்கள் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கை, 1991-92.

இணைப்பு—1.

(54..ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண். 4—தமிழ்நாடு பொதுவிற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம்.

முகவுரை :

இம்மாநிலத்தின் மொத்த வருவாய் இனங்களில் சுமார் 70 சதவீதம் விற்பனை வரிகள் மூலம் அரசுக்குக் கிடைப்ப தால் விற்பனை வரிகள் அரசின் மிகப்பெரும் வருவாய் ஆதாரமாக விளங்குகின்றன. 1990-91 ஆம் ஆண்டில் வணிக வரி மூலம் ரூ. 2,167.16 கோடி வசூலாகியது. 1989-90-ல் இவ்வகையில் ரூ. 1,759.02 கோடி வசூலாகியது. இது, முந்தைய ஆண்டைவிட ரூ. 408.14 கோடி அதிகமாகும். அதாவது 23.2 சதவீத வருவாய் அதிகரித்துள்ளது. வரித் தொகையை ஒழுங்காக செலுத்துபவர்களுக்கு மதிப்பளித்து வரித்தொகையைச் செலுத்தாமல் ஏய்ப்பவர்களுக்கு தண்டனை அளிப்பதற்கு வகைசெய்யும் வரி விதிப்பு முறை ஒன்றை அரசு கொண்டுவர கருதியுள்ளது. இந்த ஏற்பாடு வரித் தொகையை ஒழுங்காகச் செலுத்துபவர்களுக்கு ஊக்கமளித்து அதன் மூலம் வரி வசூலை அதிகரிக்க உதவும். இந்நோக் கோடு தற்போதுள்ள வரி வீதங்களை சீரமைக்கவும், வரி வசூல் நிருவாக அமைப்பை மேம்படுத்தவும் குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்படும்.

சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ''முடிவுற்ற தாக கருதப்படும் வரிவிதிப்பு முறை'' சீராகச் செயல்பட வில்லை என்பதால் வரிவசூல் நிருவாக அமைப்பை மேம் படுத்த ''தன்மதிப்பீடு'' முறை என்னும் புதிய முறையை அறிமுகப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய தன்மதிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் முறைகேடுகள் ஏதும் புரியாதவராகவும் துறை விற்பனை செய்யும் குறிப்பிட்ட சில படிவங்களை வாங்கிப் பயன்படுத்தாதவராகவும் உள்ள